தமிழ்ச்சிட்டு

சிறுவர் கலையிதழ்



எண்ணமும் செயலும்!

எண்ணங்கள் கோடி!
எழுத்துகள் ஆயிரம்!
ஏற்று முடிப்பது சிலநூறு!
பண்ணுவ துள்ளும்
பழுதுகள் முக்கால்!
பயனே மிகுதியில் ஓரிரண்டு!

இன்னல்கள் கோடி!
இடர்களும் கோடி!
எதிர்த்து முனைவதில் வட்டாட்டம்!
இன்னரும் பணியில்
இணைந்தவர் செயலோ
எதிரிலும் புதிரிலும் வெட்டாட்டம்!

மனமெனும் கயிற்றில்
மனைவியும் சுமையே!
மக்களும் உறவும் பெருஞ்சுமையே!
நனவெனும் வாழ்க்கையில்
நடந்திடும் நாடகம்!
நாளையோ இன்றே விழுந்திரையே!

நினைமின் நல்லவை!
நிகழ்த்துமின் சிறந்தவை!
நெடுகலும் வினையே நிரல்நிற்கும்!
புனைவும் தவிர்மின்!
பொய்யும் கழல்மின்!
போலியும் புரையும் நிலம்வெட்கும்!

குரல்: 6
இசை: 7-9
விலை:
25 காசு.

குழந்தைகளுக்கு

ஒலிகள்

'க, கா' என்றே காகம் கரையும்!
'கி, கீ' என்றே கிளிகள் சொல்லும்!
'கு, கூ' என்றே குயில்கள் கூவும்!
'கெ, கே' என்றே கோழிகள் கேவும்!
'கொ, கோ' என்றே சேவல் கூவும்!
'கை, கௌக்' என்னும் வானங் கோழி!

அணி பொருள்!

மண்ணில் விளைவது தங்கம்!
மங்கை வளையல் தங்கம்!

கடலில் விளைவது முத்து!
கண்ணகி மாலை முத்து!

நிலத்தில் கிடைப்பது வெள்ளி!
நிலாவின் காப்பும் வெள்ளி!

கடலில் இருப்பது பவளம்!
கலைவிழி கழுத்தில் பவளம்!

கரியில் முதிர்வது வைரம்!
கனிமொழி கம்மல் வைரம்!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-6. | தி. பி. உ௲௩. மடங்கல்-துலை (செப்-நவ. 72) | இசை 7-9

அன்பும் அறிவும் - 2.

அன்பும் அறிவும் உலகின் உயிர்த் தன்மைகளுக்கே அடிப்படையாகும் என்பதையும், அவ்விரண்டு தன்மைகளே இரண்டு பெரும் சமயங்களாக வளர்ந்துள்ளதையும், அவற்றின் இயக்க நிலைகளையும் ஒருவாறு முன் இதழில் அறிந்தீர்கள். இவ்விதழில் அவைபற்றி மேலும் சில நிலைகளை அறிவீர்கள்.

பொதுவாக அன்பும் அறிவும் உலக உயிர்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படை உணர்வுகளாக இருப்பினும், சிறப்பாக அன்பு பெண்பால் உயிர்களிடத்தும், அறிவு ஆண்பால் உயிர்களிடத்தும் மிகுந்து விளங்கத் தோன்றுவதைக் கூர்ந்து நோக்கி உணரலாம். பெண்பால் உயிர்களுக்கு உயிர்களைத் தாங்கிப் பிறப்பிக்கும் தாய்மைத் தன்மையும், அவற்றைப் புரந்து, பேணுந்தன்மையும் இயற்கையாகவே அமைந்திருப்பதால், அத் தன்மைகளுக் கேற்ப அவற்றிற்கு உடலும்

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

உள்ளமும் அமையவேண்டுவதாயின. இல்லெனின் தோற்றப்பெறும் உயிர்கள் பேணுதலும் காப்பும் இன்றி இளமையிலே அழிந்துபோகும். அதன்பின் உலகில் உயிர்களின் உயிர்ப்பு குறைந்துபோய்,விரைவில் உலகம் வெறும் பாலைநிலமாகப் போய்விடும். உயிர்கள் தோன்று வதற்கும்,அவற்றைப் பேணுவதற்கும் அன்பு போல் அறிவு அவ்வள வாகத் தேவைப்படுவதில்லை. எனினும் அறிவு அறவே இன்றி உயிர்த் தோற்றமே நிகழாதாகையால், எல்லா உயிர்களுக்கும் அன்பைப் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கேனும் அறிவு தேவைப் படுகின்றது. அந்த அளவு அறிவு பெண்பால் உயிர்களிடமே அமைந்து கிடக்கின்றது.

உயிர்கள் இளமைப் பருவம் கழிந்தபின், தாங்களாகவே தங்களைப் புரந்து காத்துக்கொள்ளும் அறிவு பெறுகின்றன.ஆகையால் அவற்றிற்கு மேலும் புரத்தல் துணை தேவைப் படுவதில்லை. எனவே கீழ்நிலை உயிர்களுக்கு தாய்த்தன்மைக்கு மேலும் அறிவை ஊக்கப் பெறும் தந்தைத் தன்மை வேண்டாதாயிற்று. ஆனால் அறிவு சிறப்பாக வளர்ச்சியுற்ற மேனிலை உயிர்களாகிய மாந்த இனத்தில், உயிர்ப் பேணுதல் போலவே அறிவுப் பேணுதலும் இன்றியமையாத ஓர் உயிருக்கமாக விரிவடைந்து விட்டதால், அதற்குத் தாய்த்தன்மை போலவே தந்தைத் தன்மையும் வேண்டுவதாயிற்று, தந்தைமையே ஆண்மைத் தன்மையாகும். அறிவூக்கம் மிக மிக உயிர்களுக்கு ஆண்மைத் தன்மையே சிறப்புற விளங்கும். ஆண்மைத் தன்மைக்கு அஃதாவது அறிவுணர்வுக்கு அடங்காநிலை இயற்கையாகும். அறிவுணர்வு அடங்குவதானால் அது வளர்ச்சியுறாது. ஒரு நிலையில் அடங்கிவிடாது மேலும் மேலும் அறிவு வளர்ச்சியுற வேண்டியிருப் பதால், அறிவுணர்வு எப்பொழுதும் எம்பிக் கொண்டேயிருக்கின்றது. அன்புணர்வு அவ்வாறின்றி ஒருநிலையில் அடங்கி விடுவதால் அறிவு வளர்ச்சிக்கு அது சிறக்கவேண்டுவது அவ்வளவு இன்றியமையாததாக உயிர்களிடத்து அமையவில்லை; மேலும் அறிவு வளர்ச்சிக்கு அன்புணர்வு ஒருவகையில் தடையாகவும் இருக்கும். எனவே அன்புணர்வு பெண்மையாகவும் அறிவுணர்வு ஆண்மையாகவும் மலர்ச்சியுற்றுத் தனித்தனியே வளரத்தொடங்குகின்றன.

அன்புணர்வுக்கு அடக்கம் இயல்புத் தன்மையாகவும், அறி வுணர்வுக்கு அடங்காத எழுச்சி இயல்புத் தன்மையாகவும் இருப்பதால் அன்புணர்வை அகம் (உள்ளம்) என்றும், அறிவுணர்வைப் புறம் (வெளியே) என்றும் பண்டைத் தமிழர் பாகுபாடு செய்தனர். அறிவு அடங்காத எழுச்சி பெற்றதாயின் அதற்குத் துணிவும் வீரமும் காவல்களாயின. அன்பு அடங்கிய அமைவு பெற்றதாயின் அதைப்

பணிவும், பண்பும் காத்து நின்றன. துணிவையும் வீரத்தையும் மறம் என்றனர் பண்டைத் தமிழ்ச் சான்றோர். பணிவையும் பண்பையும் அறம் என்றனர். இவ்வகையில் அறம் பெண்மைப் பண்பும் மறம் ஆண்மைப் பண்பு மாகும்.

இனி, அறம் பெண்மைப் பண்பாக இருப்பினும் அஃது ஆண்மையை அஃதாவது மறத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்றும், மறம் ஆண்மைப் பண்பாக இருப்பினும் அது பெண்மையை அஃதாவது அறத்தைப்புறக்கணிக்கக்கூடாதென்றும் இயற்கைத்தன்மைக் கேற்பச் செந்தமிழ் முனிவோர் வகுத்துரைத்தனர். இவ்விரண்டும் அறிவால் இணையாமற் போயினும் அன்பால் பிணைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர். "அறத்திற்கே அன்பு சார்பு என்ப; அறியார், மறத்திற்கும் அஃதே துணை" என்பது திருவள்ளுவப் பயன். அவ்வாறு அவர்கள் கட்டுரைத்தமைக்கு வேறொரு காரணியமும் உண்டு.

அன்பு ஒன்றினோடொன்று இணையும் இயல்புணர்ச்சி உடையது. அறிவு ஒன்றினின்று ஒன்று பிரியும்இயல்புணர்ச்சிவாய்ந்தது. அன்பை இருந்து உணர வேண்டும். அறிவை இயங்கி உணர வேண்டும். அன்பு வளர வளர இரண்டு உயிர்கள் ஒன்றோடொன்று இணைந்து கூடிக் குலவி மகிழும் தன்மையனவாக இருக்கும். அறிவு வளர வளர இரண்டு உயிர்களும் ஒன்றினோடு ஒன்று பிணங்கிப் பிரிந்து, அறிந்து, மகிழும் தன்மையனவாக இருக்கும். அன்பை உணர்தலும் அறிவை அறிதலும் இன்பமாகும். அன்பு அறிவை உணர்ந்தும் வியக்கும்; உணராமலும் வியக்கும். அதுபோலவே அறிவு அன்பை உணர்ந்தும் வியக்கும்; உணராமலும் வியக்கும்.

அன்புணர்வும் அறிவுணர்வும் தொடக்க நிலையில் ஒன்று பொருந்தியிருப்பினும் வளர்ச்சியுறும் பொழுதில் ஒன்றுக்கொன்று பொருந்துவதில்லை. இரண்டும் இரண்டு முனைகள். இரண்டும் இருவேறு திசைகள் நோக்கி வளர்வன. பின், ஓரளவு நல்ல வளர்ச்சியுற்ற நிலையிலேயே அவை ஒன்றையொன்று விரும்பிப் பொருந்துகின்றன. ஒருவனுக்கிருக்கும் இவ்விரு வேறு தன்மைகளையும் ஒருசேர நாம் உணர்ந்து மகிழ வேண்டுமானல் நமக்கும் அவை ஒரு சேர வளர்ச்சி பெற்று இருத்தல் வேண்டும். அக்கால் அன்பை அறிவும், அறிவை அன்புமே ஏர்க்கும். வளர்ந்த நிலைகளில் இரண்டுமே ஒன்று தான். இவ்விரண்டு தன்மைகளின் தொடக்க, வளர்ச்சி, முடிவுகளை ஓர் உவமையால் விளக்கலாம்.

ஒரு வட்டப்பாதையில் ஒரேயிடத்தில் புறப்பட்ட இரண்டு குழந்தைகள் தொடக்கத்தில் இணைந்திருந்து, பின் பிரிந்து, இடமாகவும் வலமாகவும் சுற்றத் தொடங்குகையில் அவர்களுக்கு இடையிலுள்ள வெளி மேலும் அகன்று போவதும், மீண்டும் இணைந்து கூடுகையில் ஒன்றுவதும் போலவே, அன்புணர்வும் அறிவுணர்வும் இருவேறு நிலைகளில் வளர்ந்து சென்று ஒன்றாகத் தலைக்கூடுகின்றன. இவ் வளர்ச்சி வட்டத்தைத் தனிப்பட இயங்கும் ஒருவர் நிலையிலும் வேறு பட இயங்கும் இருவர் நிலையிலும் வைத்துப் பொருத்திப் பார்ப்போம்.

—தொடரும்

பெருஞ்சித்திரன்.

அம்மா, நான் ஒரு நாய்க்குட்டியாய் இருந்தால்...!

கரு: தாகூர்
உரு: த. அன்பழகன்.

நானுன்றன் பிள்ளையின்றி நாய்க்குட்டி யாயிருந்தே,
நீ வுண்ணும் வட்டிலிலே நான்தின்ன முயல்வேனேல்,
'சீ'யென்று சினப்பாயோ, சீராட்டும் அம்மா, நீ?
"போ! அந்தப் பக்கம்போ! பொல்லாத நாயேநீ
போ!"வென்று விரட்டுவையோ? விரட்டுவையேல்,
போ'ம்மா, போ!
வரவேநான் வரமாட்டேன்; வாவென்று நீயழைத்தால்;
ஒருநாளும் ஒவ்வேன்நான், உணவூட்ட நீ இனியே!
ஒருநாளும் ஒவ்வேன்நான், உணவூட்ட நீ, இனியே! 1.

உன்குழந்தை யாயிராமல் ஒருசிறுபைங் கிளியாக
இருந்தேனேல் பறந்தோடிப் போய்விடுவேன் என்றஞ்சி
இரும்புக்கூண் டிடுவாயோ, என்னருமை அம்மா, நீ?
"இராப்பகலாய்க் கம்பியினைக் கடித்துக்கொண் டிருக்கிறதே!
என்னபிறப் போ?" எனநீ உன்விரலால் ஓங்குவையோ?
ஓங்குவையேல் போம்'மா, போ! ஓடிடுவேன் காட்டுக்கே!
ஒருநாளும் இசையேன்நான், உன்தோட்கு வரஇனியே!
ஒருநாளும் இசையேன்நான், உன்தோட்கு வரஇனியே! 2

கழுதை அழுத கதை

பெருஞ்சித்திரன்
(துரை. மாணிக்கம்)

"கேளுங்கள் ! நல்விலங்கீர் !
கீழ்மை உயிர்கள் – என
ஆளும் கல் வன்மனத்து
மாந்தர் நமை அழைப்பார் !
கீழ்மை எனில்என்ன ?
கிஞ்சித்தும் நாமவர்க்குத்
தாழ்மை இலேயே ?
தரங்கெட்டுப் போனதெதில் ?

கண்,காது வாய்மூக்கு
கால்கைகள் அன்னவர்போல் !
உண்மையிலே சொன்னல்
உறுப்புகளால் நாம்பெரியோம் !
பெண்,ஆண், பிறப்பு,இறப்போ
பேசிடிலோ ஓரமைப்பே !
மண்மேல் அவர்க்கிருக்கும்
மாண்பெல்லாம் நாம்கொண்டோம்!

வாழ்வெல்லாம் நாமும்
வருந்தி உழைக்கின்றேம் !
தாழ்வான புல்வகைகள்
உண்டே தழைக்கின்றேம் !
நம்மில் ஒருசிலரே
ஊனுணவை நச்சுபவர் !
செம்மை நெறிவாழ்க்கை !
சீர்பெற்ற நல்லமனம் !
அன்னவர்போல் பேச்சில்லே !
ஆருக் கதுவேண்டும் ?
சொன்னசொல்லே மக்களுக்குள்
சூதாய் அமைந்திலேயோ ?

பேச்சென்ன பேச்சு !
பெரும்பாலும் மக்களிடை
பேச்சடக்கம் கொண்டவரைப்
பேரறிஞர் என்கிலேயா ?

அந்தப் படிக்கே
    அறிஞரென்பார் நாம்தாமே !
சொந்தப் படிப்பெல்லாம்
    சூழ்ச்சிக்கே தானுதவும் !

ஒப்பற்ற கொள்கை
    உழைத்துண்போம் என்பதுவே !
தப்பலுண்டா அக்கொள்கை,
    நம்வாழ்வில் ? தாழ்தலுண்டா ?
கொள்ளை யடித்துக்
    குவிக்கின்ற வன்செயல்மேல்
வெள்ளை யடித்தே
    அறமென்று வீம்புகின்ற
மொள்ளைப்பேச் செங்களிடை
    முள்ளின் நுனியுண்டா ?
நொள்ளை வழக்கத்தை
    மாந்தரைப்போல் யார்தொடர்வார் ?

அன்புண்டா ? நேர்மையுண்டா ?
    ஆசையற்ற தொண்டுண்டா ?
தென்புண்டா நெஞ்சில் ?
    திருடாத எண்ணமுண்டா ?
ஒற்றுமை உண்டா ?
    ஒழுங்குண்டா மக்களிடை ?
வெற்றுச்சொல் வீச்சல்லால்
    உண்மை வினையுண்டா ?
கற்றவர்கள் என்பவர்க்கே
    கள்ளம் மிகுந்திருந்தால்,
மற்றவர்கள் எவ்வகையில்
    மாண்புயரப் பெற்றவர்கள் ?

காதல்,காதல் எனவே
    யாண்டும் கதைக்கின்றார் !
காதலுக்கு மானைக்
    களிற்றை உவமைசொல்வார் !
நம்மின் சிறந்திருக்கும்
    நல்பறவைக் கூட்டத்தில்

தம்மினுளக் காதலுக்குத்
தாமுவமை தேடிடுவார்!
மாடப் புறவென்பார்!
தோகை மயிலென்பார்!
கூடப் புனைந்துரைப்பார்;
கூடிப் பிரிந்திடுவார்!

அன்பு மணமென்றே
ஆர்ப்பாட்டம் நேர்வதுண்டு!
பின்பு குடும்பமென்று
பேச்சுக்கு வாழ்வதுண்டு!
ஆணுக்குப் பெண்ணடிமை;
ஆணடிமை தானுமுண்டு!
வீணுக்குப் பீற்றுவார்!
வெற்றுப் புலன்வாழ்க்கை!
உள்ளமெலாம் கள்ளம்!
உழைப்பெல்லாம் சோம்புவதே!
பள்ளமெலாம் மேடென்ற
பேச்சே பரந்திருக்கும்!

கொண்டவன்மேல் அன்பு
குடிகொண் டிருப்பதுபோல்
பெண்டாட்டி பேசிடுவாள்!
உள்ளம் பிளந்திருக்கும்!
அவ்வாறே அன்னவள்மேல்
அன்பு மழைபொழிவான்!
ஒவ்வா ஒழுக்கம்
ஒருநூறு கொண்டிருப்பான்!
இல்லறம் என்றே
இதனை இயம்பிடுவார்!
நல்லறத்து மாக்களே!
நானும் இருக்கின்றேன்!

என்னவரைக் கண்டதுதான்!
இன்னாள் வரைபிறரை
அன்ன படிநினைந்து
ஆட்பட்ட பேச்சில்லை"

–என்றுரைக்கும் போதே
இடைநிறுத்தித் தன்நெஞ்சில்
நின்ற கணவன்
நினைவில் உளந்தோய்ந்து,
கண்களிலே நீர்வடியக்
காதில் கனல்பாயப்
பெண்களிலே தெய்வப்
பெருங்கழுதை பின்னுரைக்கும்! –1230

(தொடரும்)

---

0 சிறுவர்களே சிறுமியர்களே!

உங்களுக்கான முத்துப் பாடல்கள்! 0
உங்கட்கு உணர்வூட்டுவன! 0
உள்ளத்திற்கு ஒளியூட்டுவன! 0

0 தமிழ்ச்சிட்டில் வெளிவந்த
பாடல்களின் தொகுப்பு நூல்!
0 அமிழ்தப் பேழை!

ஏராளமான எழிற்படங்கள் நிறைந்த நூல்
வெளி வந்து விட்டது!
விலை: 3-50
பதிவஞ்சல் செலவு: 1-25

பள்ளிப் பறவைகள்

(முதல் தொகுப்பு)
கிடைக்குமிடங்கள்:

வள்ளுவர் பதிப்பகம்
19, இலட்சுமிநாயக்கன் தெரு,
இராசிபுரம் (அ.நி)
சேலம் மாவட்டம்.

ஆசிரியர்
தென்மொழி
கடலூர்-1

தென்மொழி, கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

தொடர்: 9

பிழையில்லாமல் எழுதப் பழகுங்கள்!



பேரா. மு. வை. அரவிந்தன், கீ. க. மு.

11. அழகும் தெளிவும்

உரை நடை எழுதுவோர் பிழையில்லாமல் எழுதுவதோடு சொல்லழகும் பொருள் தெளிவும் ஏற்படுமாறு எழுதுதல் வேண்டும். கற்பவர் உள்ளம் மகிழுமாறு எழுதுவது ஒரு கலை. எழுதிப் பழகப் பழகப் பல நுட்பங்கள் வெளிப்படும். சொல்கிறார், சொல்கின்றார், சொல்கின்றார்கள், சொல்கின்றனர் ஆகியவை நிகழ்காலத்தைக் குறிப்பினும் இவற்றைக் கையாளுவதில் ஒருவகை ஒழுங்கை மேற்கொள்ளுதல் வேண்டும். ஒருவரே ஒரு நூலுக்குள்ளேயே ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வகையாக எழுதுதல் கூடாது. நினைவோடு நூல் முழுவதும் ஒரே சீராய் அச்சொற்களை அமைத்தல் வேண்டும். ஒருவர்க்கு-ஒருவருக்கு, நண்பர்க்கு-நண்பருக்கு என்று இரு வகையாய் எழுதாமல் ஏதேனும் ஒரு வகையாய் எழுதுதல் வேண்டும்.

ஒருவரைச் சுட்டும் போது ஓரிடத்தில் அவர் என்றும், மற்றோர் இடத்தில் இவர் என்றும் சுட்டுதல் கூடாது. சுட்டுப்பெயர் அண்மையில் குறித்த பொருளையே சுட்டும். ஆதலின் நாம் எதனைக் குறிப்பிட விரும்புகிறோமோ அதனைத் தெளிவாகச் சுட்டுதல் வேண்டும். முதலில் பல பெயர்களைக் கூறிப் பின்னர்ச் சுட்டி ஒருவரைக் கூறும் போது சுட்டுப் பெயர் யாரைக் குறிக்கின்றது என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். அவர், அவர்கள் இரண்டும் பன்மையே என்றாலும் இவற்றைக் கவனித்துப் பொருள் நோக்கி ஒருவகையாய் அமைத்தல் வேண்டும். அதை, அதனை என்னும் இரு சொற்களையும் ஓசைநயங் கருதி ஏற்றவாறு அமைத்தல் வேண்டும்.

ஓரிடத்தில் கம்பன் என்றும் மற்றோர் இடத்தில் கம்பர் என்றும் எழுதுதல் கூடாது. இவ்வாறே வள்ளுவன் என்றும் திருவள்ளுவர் என்றும் வள்ளுவர் என்றும் பல வகையாய் அமைப்பது தவறாகும்.

மூன்று காலங்களும் மயங்கி வராமல் கவனித்து எழுதுதல் வேண்டும். தொடர்ந்து கூறும் நிகழ்ச்சியொன்றை ஓரிடத்தில் நிகழ்

காலத்திலும் மற்ருேர் இடத்தில் இறந்த காலத்திலும் கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஒரே சொல் திரும்பத் திரும்ப வந்தால் உரை நடையின் அழகு கெடும். என்னலாம், ஆகவே, ஏனென்ருல், ஆனுல் போன்ற சொற்களில் ஏதேனும் ஒன்றைப் பல இடங்களில் சிலர் எடுத்தாளுவர். அவ்வாறு செய்வது கற்போர்க்குச் சலிப்பு உண்டாக்கும்.

என்ன, எத்தனே, எவ்வளவு ஆகிய சொற்களின் பொருளறிந்து பொருத்தமாய் ஆளுதல் வேண்டும்.

இப்போது மணி என்ன ?
உங்களுக்கு எத்தனேக் குழந்தைகள் ?
நீங்கள் வர எவ்வளவு நேரம் ஆகும் ?

என்று எழுதுதல் வேண்டும்.

என்ருன், உரைத்தான், கூறினுன், சொன்னுன், கேட்டான் வினவினுன், தெரிவித்தான், அறிவித்தான், வேண்டினுன், கட்டளே (ஆணே) யிட்டான் ஆகிய சொற்கள் பொருளால் வேறுபட்டவையாகும். இவற்றின் இயல்பறிந்து பயன்படுத்த வேண்டும்.

'நான் நாளே வருவேன்' என்ருன்.
நான் கூறும் போது அவன் கவனமாய்க் கேட்டான்.
எங்கே என்று வினவினுன்.
அவன் பெயரைத் தெரிவித்தான்.
மழைவரும் என்று அறிவித்தான்.
தருமாறு வேண்டினுன்.
மன்னன் கட்டளே (ஆணே)யிட்டான்.

என்று வரும்.

அழைத்தல், வழங்குதல், கூறுதல், குறிப்பிடுதல் என்னும் சொற்களேயும் பொருளறிந்து ஆளுதல் வேண்டும்.

ஒரு நிகழ்ச்சியுடன் தொடர்பு கொண்ட பலரைப் பெயர் கூருமல் குறிப்பிட வேண்டி இருந்தால், வேருெருவர், இன்னெருவர், மற்ருெருவர் என்று வேறு வேறு சொற்களால் குறிப்பிடுதல் வேண்டும்.

பிறமொழியில் தமிழ்ச்சொற்கள்

பாவாணர் நூல்களினின்றும் தொகுத்தவர் :

இல. க. சுபாசந்திரன், அறி. இ.

1. நிலைத்திணை நூல் (Botany)

புரு(இளப்பிஞ்சு, குழந்தை)	L. Embryo
தளிர்	Gk. Thallos
(Thallophyta- தளிர்ப்பயிர்கள்)	
கால் (காம்பு)	L. Canlis Gk. Kanlos
மடல்	Petal, Gk. Petalon
கிளை	Gk. Klados
ஓலை	L. Folium
மொட்டு	Flower-bud
முட்டு	Fruit-bud
மலர் (அலர்)	Bloom Flower
குரல்(கூலக் கதிர்)	Crop
நெற்று	Nut
பிசின் (பிசினி)	Viscin (Viscum)
சருகு	Sear Gk. Seros
சாவி (பதர்)	Chaft
பாசி	Moss L. Muscus
பவர் (கொடி)	Bower (Dense creeper)
அகில்	Agila, agal wood Eagle wood, L. Agallocha
பம்பு (மூங்கில்)	Bamboo
கன்னல் (கரும்பு, பேய்க்கரும்பு?)	Gk. Kanna (reed)

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஐயத்திற்கு இடமான கருத்து, இருவகையாய்க் கூறப்படும் செய்தி, தெளிவாகத் தெரியாதவை, பிறர் சொன்னவற்றை அடிப்படையாய்க் கொண்டவை ஆகியவற்றை நுட்பமாக வெளியிடல் வேண்டும், என்பர், என்று கருதலாம், என்றும் கூறுவர், என்னலாம், என்று கருதவும் இடமுண்டு என்று அவ்வக் கருத்துக்கேற்ப முடிப்பது நல்லதாகும். பொருந்தாத கருத்தையும் மாறுபட்ட கருத்தையும் நயமாக மறுக்க வேண்டும். இக்கருத்திற்குச் சான்றில்லை, இஃது உண்மைக்கு மாறுபட்டது, இஃது அறிஞர்க்கு உடன்பாடன்று, ஆராய்ச்சிக்குப் பொருந்தாதது என்று கூறி மறுக்கலாம்.

(—தொடரும்)

இஞ்சிவேர்	L. Zingiber Gk. Zingi-beris Ginger
கொட்டை, கொட்டான் (பருத்தி)	Cotton
சோளம் (கூலம்)	Corn
அரிசி	Rice
நாறு (தோன்றுதல்)	Nature
பழம் பயிரியல்	Palaeophy-tology

2. விலங்கு நூல் (Zoology)

2. 1. விலங்குப் பெயர்கள்

சங்கு	L. Conche Gk. Cogkhe Conch
குரு	Coral L. Corallum
பாரை (மீன்)	Parr, Par (Salmon)
சுறவு	Shark
வரி-வரால்	Murrel
களவன், கடப்பன்	Gk. Karabos
சுரும்பு	Drone Gk. Thronx
விட்டி, விட்டில்	Beetle
நாகம் (நகர்)	Snake (As. Snican)

புதர், போதா	Bittern L. Butro

(A marsh bird of the heron family; Ardea or Kindred genus)

குருகு (நாரை)	L. Grus Crane

(Genus: Grus; family: Gruidal)

சிட்டு (சிறு குருவி)	Chit (இளங்குழவி)
சிக்கன் (சிறு)	Chicken
பிட்டா (தெலுங்கு)	Biddy (chicken)
கோழி	L. Gallus Gallina
"கொக்"கக்கோ	Cock
தோகை (மயில்)	Gk. Taos L. Pavus, Pavo
கொட்டி (பூனை)	Cat L. Catta
பில்லி (தெ),,	L. Felis
பூசை ,,	Pussy
மூங்கா (கீரி)	Mungoose
உதள் (ஆடு)	Wether (ram)
கொறி (செம்மறி யாடு)	Gk. Krios (ram)
மறி (பெட்டைக் குதிரை)	Mare
கோ (ஆ, ஆன்)	Cow
புள்ளம்	Bull
சேவு	Jack, F. Jackass
உளியம் (கரடி)	L. Ursus(bear)

ஏழகம், மிழா	Gk. Alke L. Alces
மாமதம் (பெருயானை)	Mammoth ?
மன்	Man

2. 2. விலங்குப் புற உறுப்புகள்

மூளை	Gk. Muelose
மூஞ்சி (முகம்)	Muzzle
புருவம்	Brow Gk. Ophrys
இறப்பை	Eares
மூக்கு	Beak L. Mucus Gk. Mukter
கவுள்	Jowl
களம்	Gullet
குரல் (தொண்டை)	Crag (neck, throat) Crop (the craw)
கூடு (காப்புறை)	Hood
கை	Gk. Kheir (Chirography, etc.)
மருமம்	L. Mamma Mammalia ?
இடுப்பு	hip
புட்டம்	Buttock
பொச்சு, பொச்சை	Pouche
கால்	Gk. Skelos
பதி-பாதம்	L. Pedis Gk. Pedos
உகிர் ('நகம்')	L. Unguis

2. 3. விலங்குப் பொது உறுப்புகள்

கறி	Gk. Kreas
நரம்பு	L.Nervus Gk. Neuron
குருதி	Cro
அரத்தம் (குருதி)	Gk. Erythros
சீலம்	L. E. Serum
காழ்ப்பு	Callous L. Callum

2. 4. விலங்கு இளமைப் பெயர்கள்

புரு	Embryo
பீற்றை	foetus
பார்ப்பு, பார்ப்பா, பாப்பா	Baby
குட்டி	Kid
குருள் (சிறியள்)	Girl L. gor, gore
பாவை	Pup, Puppy L. Pupa, Pupilla
பிள்ளை	L. Pullus (young animal)
பிள்ளா (தெலுங்கு)	L. filius (மகன்)

	filia (மகள்)
பையன், பைதல்	Gk. Pais Paidos L. Puer cf. Paediatrics
மகன்	L. mas (ஆண்)
விடலை	L. Vittula Gk. Italos (a bull-calf)
நாகு (இள விலங்குப் பெயர்)	nag (Pony)

2.5. விலங்கு ஒலிகள்

கூ, கூவு	Coo
கரை	Crow, cry
சீறு	Surijo
ஊளை	Howl
கனை	neigh
உரறு	Roar
பிளிறு	Blare
சவை(த்தல்)	Chew
சப்பு, சூப்பு	Sip, Soup

இசை	hiss
இம்—இமிள்	hum

2.6. பொது

குலம், குலன்	clan
பதி, பாதம்	L.pedis, Gk. pedos Centipede etc
குரு,குருகு	Genus: Grus Family: Gruidal
கோழி வடிவு	Galli forme
மெல்(லிய)	L. Molluscus Mollusc (a class of soft bodied animals) Melacoderim (soft skinned)
குப்பை(எரு)	Gk. Kopros (dung)
துமி (வெட்டு, துணி)	Toma; cf. Anatomy
பெறு–பெற்றோர்	L. Parens, Parent

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

		உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	உருபா	3-00	4-50	6-00
தனியிதழ்	,,	0-25	0-35	0-50

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

உங்கள் பெயர் இவற்றுள் ஒன்று?

உடனே தமிழ்ப் பெயராக மாற்றிக் கொள்ளுங்கள்!

வடமொழிப்பெயர்—தமிழ்ப்பெயர்.

பால்ராஜ்—இளங்கோ
தர்மராஜ்—அறங்கோ
சாம்ராஜ்—வேந்தன்
சூரியராஜ்—கதிரையன்
கலியராஜ்—மருணீக்கி
சபாராஜ்—அம்பலவாணன்
ராஜராஜன்—மன்னர்மன்னன்
ஆனந்தம்—மகிழ்நன்
சிவானந்தம்—சிவமகிழ்நன்
முருகானந்தன்—இளமகிழ்நன்
ராமானந்தன்—எழில்மகிழ்நன்
சுகானந்தம்—நலமகிழ்நன்
அருளானந்தன்—அருண்மகிணன்
கமலானந்தன்—பூமகிணன்
நித்தியானந்தம்—நித்தலின்பன்
விவேகானந்தம்—அறிவின்பன்
சச்சிதானந்தம்—மெய்யறிவின்பன்
கருணானந்தம்—அருளின்பன்
தயானந்தம்—அருளின்பன்
அழகானந்தம்—எழிலின்பன்
யோகானந்தம்—மகிழோகன்
சேகர்—சேரன்
தனசேகரன்—திருச்சேரன்
ஞானசேகரன்—அறிவுறுவோன்
குணசேகரன்—பண்புறுவோன்
ராஜசேகரன்—அரசுறுவோன்
சந்திரசேகரன்—பிறைசூடி
வெங்கடாஜலம்—வேங்கடவன்
தணிகாஜலம்—தணிகையான்
விருத்தாஜலம்—பழமலை
அருணாஜலம்—அருண்மலை
சோணாஜலம்—அண்ணாமலை
சாமிதுரை—ஐயாத்துரை
ராமதுரை—துரையழகன்
ரங்கதுரை—அரங்கதுரை

வடமொழிப்பெயர்—தமிழ்ப்பெயர்

அம்பாள்—அம்மை
சுந்தராம்பாள்—அழகம்மை
சௌந்தராம்பாள்—அழகம்மை
ராமாம்பாள்—எழிலம்மை
ஞானம்பாள்—அறிவம்மை
சொர்ணம்பாள்—பொன்னம்மை
கனகாம்பாள்—பொன்னம்மை
பவுனம்பாள்—பொன்னம்மை
மதுராம்பாள்—இன்னம்மை
தர்மாம்பாள்—அறவம்மை
வடிவாம்பாள்—வடிவம்மை
ஜகதாம்பாள்—உலகம்மை
லோகாம்பாள்—உலகம்மை
ப்ரஹதாம்பாள்—பெரியம்மை
ரத்தினம்பாள்—மணியம்மை
கோகிலாம்பாள்—குயிலம்மை
மயிலாம்பாள்—மயிலம்மை
மீனம்பாள்—மீனம்மை
முல்லையம்பாள்—முல்லையம்மை
ராஜம்மாள்—அரசம்மை
விருத்தாம்பாள்—பெரியநாயகி
வாலாம்பாள்—இளையநாயகி
பாலாம்பாள்—இளையநாயகி
சௌந்தரி—எழிலி
சுந்தரி—செல்வி, அழகி
சுகுணசுந்தரி—நற்குணவழகி
ஞானசுந்தரி—அறிவழகி
திரிபுரசுந்தரி—முந்நகரழகி
தினகரசுந்தரி—கதிரழகி
கல்யாணசுந்தரி—மணவழகி
மோகனசுந்தரி—உளங்கவரழகி
சிவகாமசுந்தரி—சிவநேயச்செல்வி
கமலசுந்தரி—தாமரைச்செல்வி
ராஜசுந்தரி—எழிலரசி
ராஜாத்தி—அரசி

தொகுப்பு: கதிர். சுப்பையன்,
ஆசிரியர், நகராட்சிப்பள்ளி, குடந்தை.

முத்துமொழிகள்

0 நீ சிரிக்கும்போது உலகமும் உன்னுடன் சேர்ந்து சிரிக்கும். ஆனால் அழும்போது நீ தனியாக அழ வேண்டியதுதான். —பால்சாக்.

0 அருள் என்பது என்ன? அன்புகாட்டப் படுவதற்கான தகுதி ஒவ்வொருவருக்கும் ஓரளவு உண்டு. அதற்கு மேலேயும் அவர்களிடம் அன்பு காட்டுவதுதான் அருள். —சீபர்.

0 செல்வர்களின் மாளிகையை விட ஏழைகளின் குடிலில்தான் அன்பு மிகுந்து இருக்கிறது. —இங்கர்சால்.

0 கொடு; அதன் மதிப்பைக் கணக்கிடாதே! போரிடு; காயங்களைக் கவனியாதே! பாடுபடு; ஓய்வைத் தேடாதே!

—இக்னேசியசு இலயோலா

0 ஒருவனுடைய வாழ்வின் சிறந்த பயன், அந்த வாழ்விற்கும் அப்பால் நிற்கக் கூடிய ஏதோ ஒன்றுக்காகச் செலவிடுவதே!

—வில்லியம்

0 பிறர்படும் துன்பத்தைக்கண்டு கடல்அளவு கண்ணீர் வடிப்பவரை விட பிறர் சிந்தும் கண்ணீரில் ஒரே ஒரு துளியையாவது துடைப்பவரே தலைசிறந்த புகழுக்குரியவர். —யாரோ.

(தொகுப்பு: இரா. கதிர்மதி–நீடாமங்கலம்)

0 நன்கு எண்ணுதெடுத்த ஆயிரம் முடிவுகளும் சரி; ஆர அமரச் செய்த ஒரு தீர்ப்பும் சரி. —வில்சன்

0 ஒரு மாந்தனுடைய மெய்யான உடைமை, அவனது நினைவாற்றலே. —பிளேட்டோ

0 எதிர்ப்புகள் ஒவ்வொன்றும் வாழ்வின் முன்னேற்றத்தில் ஒவ்வொரு படியாகும். —கார்லைல்

0 எவன் ஒருவன் உன்னை வீணுகப் புகழ்ந்து பேசுகிறானோ, அவன் உன்னிடத்தில் விரைவில் பகையாவான். —சேக்சுபியர்

0 கால் தடுமாறினால் சமாளித்துக் கொண்டு நிற்கலாம்; ஆனால் 'நா'த் தவறினால் நீங்கள் மீளவே முடியாது. —பிராங்ளின்

(தொகுப்பு: நா. மதிவாணன்)

0 புகழ்க் கோயிலைக் கட்டியவனுக்கு, பளிங்குக் கல்லறை கட்டத் தேவையில்லை. —அலெக்சாண்டர் போப்.

0 ஆண்டுக்கணக்காக ஏற்பட்ட எத்தனையோ தோல்விகளை யெல்லாம், அரைமணி நேர வெற்றி ஈடுகட்டிவிடும்; நம்மை ஈடேற்றிவிடும்; ஏற்றம் பெருக்கிவிடும். —பிரௌனிங்

0 எதிரி பாராட்டும் படியான வாழ்வுதான் இணையில்லாத புகழ் வாழ்வு. —தாமசுமூர்.

(தொகுப்பு: ப. ஆறுமுகம்)

பாவாணர் பயன்மொழிகள்

தொகுப்பு: **நா. எழில்-மகிழ்நன்.**

0 தமிழ் என்பது தனித்தமிழே. தனித் தமிழாலன்றிக் கலவைத்-தமிழால் தமிழன் உயர்வடைய முடியாது. தமிழென்று பெயரிட்டுக்-கலவைத் தமிழை வழங்குபவன், அவலை நினைத்துக் கொண்டு உரலை யிடிப்பவனே யாவன்.

0 மொழிகளின் உயர்வு தாழ்வு அவற்றின் இலக்கணவிலக்கிய சொல்வளத் தன்மைகளைப் பொறுத்ததேயன்றி, அவற்றைப் பேசுவோர் தொகையைப் பொறுத்ததன்று.

0 தமிழ் கடன்சொற்களால் தளர்ந்ததன்றி வளர்ந்ததன்று. கடன் கோடலால் ஓர் ஏழைக்கு நன்மை; ஆனால் செல்வனுக்கோ இழிவு. அதுபோல் கடன் சொற்களால் பிறமொழிக்கு வளர்ச்சி; தமிழுக்கோ தளர்ச்சி.

0 இந்தி இன்னும் சில்லாண்டில் ஆங்கிலம் போல் வளர்ச்சி-யடைந்து விடுமென்பது, பிறவிக் குருடனைப் பிடித்து அரச விழி விழிக்கச் சொல்வ தொத்ததே.

0 வடமொழியை யெதிர்த்து வெல்லும் வலிமை தமிழருக்கே யிருப்பதால், ஆரியக் கட்டுப்பாடு தமிழ் நாட்டிலேயே மிகமிகக் கடுமையாகப் புகுத்தப் பட்டுள்ளது.

0 தமிழின்றேல் தமிழனில்லை. ஆதலால் தமிழ் அழியின் தமிழ் என்னும் இனமும் நாளடைவில் மறைந்துபோம்.

0 உலகில் முதன் முதல் நாகரிகப் பண்பாட்டைக் கண்டவரும் அதை உலகெங்கும் பரப்பினவரும் தமிழரே.

0 அஃறிணையினின்று மக்களைப் பிரித்துக் காட்டுவதும், ஒரு நாட்டு மக்களின் நாகரிகப் பண்பாட்டு அளவு கோலும், மொழியே.

0 ஒரு மொழியில் ஓர் அகரமுதலி தொகுத்தற்கோ, திருத்தற்கோ இலக்கண அறிவு, சொல்லாராய்ச்சி, மொழியாராய்ச்சி, சொற்றொகுப்பு ஆகிய நாற்றிறம் வேண்டும்.

தமிழ்ச் சொல் வளம்

அரசர் வகை :

ஊர்த்தலைவர்:-

குறிஞ்சித்தலைவன் பெயர்கள் - மலையன், வெற்பன், சிலம்பன், பொருப்பன். கானக நாடன். (வெற்பு, சிலம்பு, பொருப்பு என்பன மலையின் பொதுப் பெயர்கள்.)

முல்லைத்தலைவன் பெயர்கள் - குறும்பொறை நாடன், அண்ணல், தோன்றல்,

மருதத் தலைவன் பெயர்கள் - ஊரன், மகிழ்நன், கிழவன்.

பாலைத் தலைவன் பெயர்கள் - விடலை, மீளி, காளை.

நெய்தல் தலைவன் பெயர்கள்- கொண்கன், சேர்ப்பன்' துறைவன், மெல்லம்புலம்பன்.

நாட்டுத்தலைவர்:

குரிசில் - பிரபு ; வேள் - குறுநில மன்னன் ;

குறும்பன் - கொள்ளைத் தலைவன் ; மன்னன் - சிற்றரசன் ;

கோன் அல்லது கோ-அரசன் ;

வேந்தன் - முடிவேய்ந்த பேரரசன், இந்திரன்.

பேய்வகை:

இருள் அல்லது கருப்பு - இருண்டு தோன்றும் பேய் ;

பேய் - அஞ்சத் தக்க ஆவி ;அலகை - துன்புறுத்தும் பேய் ;

சூர் அல்லது சூரர மகள் அல்லது அணங்கு - அஞ்சத்தக்க பெண் பேய் ;

தாக்கணங்கு - புடைத்துக் கொல்லும் பெண் பேய் ;

நோக்கணங்கு - பார்வையாற் கொல்லும் பெண் பேய் ;

மோகினி - ஆடவர்க்கு மோகத்தை யுண்டாக்கிக் கொல்லும் பெண் பேய் ;

இடாகினி - இடுபிணந்தின்னும் பெண் பேய் ;

குறளி - குட்டிப் பேய் ; பூதம் - பெரும் பேய்;

கூளி - குறும் பூதம் ; முனி - சடைப் பேய் ;

ஆலி - ஆலமரப் பூதம்.

—தொடரும்

(பாவாணர் - சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.